[28th February 1969

டிருப்பதால் வெல்லத்தின் விலை வெகுவாகக் குறைந்துவிட்டது. அதனால் வெல்ல உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ரூ. 60-க்கு விற்ற வெல்லம் இப்போது ரூ. 40-க்கு விற்கிறது. ஆகையால் தாராளமாக வெளி ராஜ்யங்களுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று இனிமேலாவது அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இப்போது இருக்கிற நிலையில் வெளியே வெல்லம் போவதற்குத் தடை எதுவும் இல்லை. ஹைகோர்ட் தீர்ப்பும் அதற்கு பாதகமாக இல்லை. ஆனால் வெல்லம் உபயோகிப்போர் எண்ணம் விலை ஏறியிருக்கிறது என்பதுதான். இதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கவனிக்கவேண்டும்.

Government Agricultural Colleges

*67 Q.—THIRU M. SANKARALINGAM PILLAI (on behalf of Thiru V. ISVARMURTHI): Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the extension work done by the Government Agricultural Colleges by way of taking the latest findings of improved Agricultural practices to the doors of the farmers?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: வேளாண்மைத்துறை வெளியிடும் திங்கள் இதழான "மெழிச்செல்வம்" மூலமாகவும் "வேளாண்மை ஆராய்ச்சி" என்னும் ஆண்டு இதழ் மூலமாகவும் கையேடுகள், சிறு வெளியீடுகள் மூலமாகவும் ஆராய்ச்சி கண்டு பிடிப்புகள் பரந்து விளக்பரப்படுத்தப்படுகின்றன. இத்துடன், வேளாண்மை கல்லூரி ஆராய்ச்சி நிலையம் நிர்வகிக்கும் மத்தியப் பொருட்காட்சியை உழவர்கள் பார்வையிடுகின்றனர். வளர்ச்சிப் பிரிவினர் வேளாண்மைக் குறிப்புகளை ஒவ்வொரு மாதமும் சிறப்பாகத் தயாரிக்கின்றனர்; இவற்றை, வளர்ச்சிப் பிரிவின் பல பணியாளர்களிடை பரப்புவதற்காகத் தமிழ்நாடு வேளாண்மை இதழில் வெளியிடுகின்றனர்.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, பஞ்சாபில் சர்க்கார் நடத்துவது போல, விவசாயிகளுடைய மகாநாடுகள் நடத்தி அங்கே இந்த மாதிரி புது விஷயங்களை எடுத்துச் சொல்ல அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மாவட்ட அளவில் உழவர்களைக் கூட்டி மகாநாடு நடத்துகிறோம். ஆராய்ச்சியாளர்களை வைத்து மகாநாடு நடத்த வேண்டுமென்று சொன்னால் அதையும் யோசிக்கலாம். கருத்தரங்கங்கள் விளம்பரங்கள் கண்காட்சிகள் முதலியன அமைக்கப்பட்டு விளக்கங்கள் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப் படுகின்றன.

திரு. வி. கே. ராமசாமி முதலியார்: எக்ஸ்டென்ஷன் ஆபீசர், டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சரல் ஆபீசர் மற்றும் கீழே உள்ள ஆபீசர்கள் பூராவும் கிராமங்களைச் சுற்றி வருவதில்லை. விவசாயிகளுக்கு வேண்டிய செய்திகளை, பூச்சி மருந்து போடுவது, விதைகள்

28th February 1969]

போடுவது போன்றவற்றை அந்தந்த காலங்களில் தெரிவிப்பதில்லை, யோசனை சொல்வதில்லை. அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விவசாய இலாகாவில் பணியாற்றுகிற ஊழியர்கள் இதுவரையிலும் இல்லாத அளவுக்குக் கடந்த இரண்டாண்டுகளாக விவசாயிகளோடு நெருங்கிய தொடர்பு கொள்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் ராமசாமி முதலியார் அவர்கள் சென்னையிலேயே பெரும்பாலும் இருப்பதால் ஒருவேளை அதிகாரிகள் கிராமங்களுக்குப் போவது தெரியாமல் இருந்திருக்கலாம். பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள் மூலமாகச் சர்க்காருடைய திட்டங்களை, பூச்சிமருந்து, விதைபற்றிய விஷயங்களை விளம்பரம் செய்துவருகிறார்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : நேரடியாக விவசாயம் செய்யும் விவசாயிகளுக்குக் கோடை காலங்களில் விவசாயக் கல்லூரி இல்லாததால், நவீன முறையில் விவசாயம் பற்றி பயிற்றுவிக்க கட்டணம் இல்லாத வகுப்புகள் நடத்த, குறுகிய கால வகுப்புகள் நடைபெற, அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அத்தகைய பயிற்சிகள் பட்டுக்கோட்டை, பவானிசாகர் முதலிய இடங்களில் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. விவசாயக் கல்லூரிகளில் காட்சிப் பொருள்களாக விவசாயிகளுக்குக் காண்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நம் நாட்டு விவசாயிகள் மட்டுமல்ல, வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் கூட அதில் பலன் பெறுகிறார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the fact that the radio is a powerful medium of mass communication, may I know whether there is any co-ordination between the Department of Agriculture of the Government of Tamil Nadu and the All India Radio in broadcasting news regarding the various new developments that have taken place in the agricultural sector ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வானொலி மன்றங்கள் மூலம் கிராம விவசாயிகளுக்கு செய்திகள் அறிவிக்கப்படுகின்றன. ஆங்காங்கு வானொலி சங்கங்கள் அமைத்து, அவர்களிடமிருந்து கேள்விகளைப் பெற்று, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்களிடமிருந்து பதில் பெற்று ஒலிபெருக்கி மூலமாக அறிவிக்கப்படுகிறது.

Misbehaviour of a Sub-Inspector

* 61. Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state —

(a) whether any complaint had been received regarding the indecent behaviour of a Sub-Inspector towards a lady clerk working in the Fort St. George, Madras, during October 1967; and

(b) if so, the action taken thereon ?